# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : DW-1 Date : 06.03.2026
Case No. : **O.S.24/2024** Nationality : Indian
Name : விஜயலெட்சுமி Religion :
Father's/Husband's Name : பாஸ்கர் Age : 35
Village : திருப்பனந்தாள்
Taluk : திருவிடைமருதூர்

பி.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் வழக்கின் 1 முதல் 3 இளவர் பிரதிவாதிகளின் இயற்கை பாதுகாவலர் மற்றும் தாயார் ஆவேன். பிரமாண பத்திரம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். 17.02.2016 தேதியிட்ட 1ம் இளவர் பிரதிவாதி சுவாதி என்பவரின் பிறப்பு சான்றிதழ் அசலுடன் ஒப்பிடப்பட்ட கணினி நகல் பி.**வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.04.2022ம் தேதியிட்ட 1ம் இளவர் பிரதிவாதி சுவாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட கணினி நகல் பி.**வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 29.12.2017 தேதியிட்ட 2ம் இளவர் பிரதிவாதி ரிஷிவரதன் பிறப்பு சான்று அசலுடன் ஒப்பிடப்பட்ட கணினி நகல் பி.**வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2-ம் இளவர் பிரதிவாதி ரிஷிவரதன் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட கணினி நகல் பி.**வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14.12.2021 தேதியிட்ட 3ம் இளவர் விஜயபாஸ்கர் பிறப்பு சான்று அசலுடன் ஒப்பிடப்பட்ட கணினி நகல் பி.**வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1 முதல் 3 இளவர்

பிரதிவாதிகளின் தாயாரான விஜயலெட்சுமியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் பி.**வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கும்பகோணம் கூடுதல் மாவட்ட அமர்வு (விரைவு) நீதிமன்றம் ஓ.எஸ்.நெ.177/2021 பிராது சான்றிட்ட நகல் பி.**வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1 முதல் 3 இளவர் பிரதிவாதிகளை இறந்துபோன பாஸ்கரனின் வாரிசுதாரர்களாக விளம்புகை செய்து தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி ஞானசௌந்தரியை எனக்கு தெரியும். 1ம் வாதி ஞானசௌந்தரியின் கணவர் என்றால் சரிதான். பாஸ்கர் எனக்கு என்ன உறவு என்றால் பாஸ்கர் நான் வேலைக்கு சென்றபோது என்னை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார். எனக்கும் பாஸ்கருக்கும் பிறந்த குழந்தைகள்தான் சுவாதி, ரிஷிவரதன், விஜயபாஸ்கர். எனது குழந்தைகளின் பிறப்பு சான்று, ஆதார் அடையாள அட்டை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பாஸ்கரின் தந்தை பெயர் கணேசன். பாஸ்கரன் தாயார் பெயர் மணோன்மனி. எனது மாமனார் கணேசன் இறந்துவிட்டார். எனது மாமியார் உள்ளார். பாஸ்கரன் முதல் மனைவி ஞானசௌந்தரிக்கு ஹாரண்யா என்ற பெண் குழந்தை உள்ளது. எனக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளை தவிர வேறு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக பொய்யான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- P. Rangeswari,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.